# யா/அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை பாடசாலை.

## சற்கோட்டை, அல்வாய்

## வருடாந்த ஒளிவிழாவும், பரிசளிப்பும்

## 2016

## வருடாந்த அறிக்கை

## மகுடவாசகம்

கல்வி அழகே அழகு.

## பணிக்கூற்று

நவீன கற்றல் கற்பித்தல் முறைகளினூடாகவும் சிறந்த வழிகாட்டல் மற்றும் சமூக உறவுகளின் மூலமும் எதிர்கால சவால்களை எதிர் கொள்ளக்கூடிய வகையில் மாணவர்களை தயார் செய்தல்.

## தூரநோக்கு

அறிவும் ஆற்றலும் மிக்க நற்பிரஜைகள்.

# யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை.

## அல்வாய்

## வருடாந்த ஒளிவிழாவும், பரிசளிப்பும் – 2016

காலம் : 19.11.2016 சனிக்கிழமை

நேரம் : பி.ப 3.00மணி

இடம் : பிலோமினா மண்டபம்

**தலைவர்**

திரு சோ.ஜெயதேவா

(அதிபர்)

**பிரதம விருந்தினர்**

வண.பிதா அ. யாவிஸ் அடிகளார்

(மறைக்கோட்ட குரு முதல்வர், பருத்தித்துறை)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு எம்.கே. சிவாஜிலிங்கம்

(கௌரவ வடமாகாண சபை உறுப்பினர்)

திரு மா. நவநீதமணி

(கோட்டகல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)

வண.பிதா ம. கான்ஸ் போவர்

(பங்குத்தந்தை, சற்கோட்டை, அல்வாய்)

அருட்சகோதரி அ. ஜசிந்தாராணி

(அதிபர், புனித தோமஸ் மகளீர் வித்தியாலயம்)

திருமதி டொறின் மன்மத நாயகம்

(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், கத்தோலிக்கம்)

# யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை.

## வருடாந்த ஒளி விழா – 2016

### நிகழ்ச்சி நிரல்

- ஒளியேற்றலும் வார்த்தை வழிபாடும்.
- விருந்தினர்களை வரவேற்றல்.
- மங்கள விளக்கேற்றல்.
- இறை வணக்கம். – கிறிஸ்தவ கீதம்.
- வரவேற்புரை.
- ஆசியுரை.
- அதிபர் உரை.
- பரிசில் வழங்கல்.
- சிறப்பு விருந்தினர்கள் உரை.
- பிரதம விருந்தினர் உரை.
- நன்றி உரை.
- இடைவேளை.
- கலை நிகழ்ச்சிகள்.
- பாடசாலைக் கீதம்.

# யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, சற்கோட்டை, அல்வாய்.

## வருடாந்த அறிக்கை.

எமது பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பும் வருடந்தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இன்று எமது பருத்தித்துறை மறை கோட்ட குரு முதல்வர் வணக்கத்திற்குரிய அ.யாவிஸ் அடிகளார் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துக் கொண்டு இருப்பதில் எமது பாடசாலைச் சமூகம் மிக மகிழ்ச்சி அடைகின்றது. அவர் எமது பிரதேச மக்களின் கல்வி மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தில் மிகந்த ஈடுபாடு காட்டி வருபவர்.

இதேபோல இன்றைய நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் எமது பங்குத்தந்தை வண.பிதா ம. கன்ஸ்போவர் அடிகள் எமது மாணவர்களினது கல்வி முன்னேற்றத்திலும் எமது பாடசாலை சமூகத்தின் உயர்விலும் அக்கறையுடன் பணியாற்றுபவர். எமது சிறப்பு விருந்தினர் கௌரவ வடமாகாண சபை உறுப்பினர் திரு எம்.கே. சிவாஜிலிங்கம் அவர்கள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கும் மாணவர் சமூகத்தின் கல்வி அபிவிருத்திக்கும் அரிய பணியாற்றியவர். தற்போது மாகாணசபை உறுப்பினராக எமது மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் உரிமைகளை வென்றெடுக்க துணிச்சலுடன் குரல் கொடுத்து வருபவர். எமது சிறப்பு விருந்தினர் பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு மா. நவநீதமணி அவர்கள் அயல்கிராமத்தை சேர்ந்தவர். தனது பாடசாலை போல எமது பாடசாலைக்கும் வேண்டிய சகல உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருபவர்.

எமது சிறப்பு விருந்தினர் றோமன் கத்தோலிக்க சமய பாடத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி டொறின் மன்மதநாயகம் அவர்கள் கத்தோலிக்க மாணவர்களின் சமய பாட அடைவுமட்ட உயர்வுக்காக உழைப்பவர். சிறப்பு விருந்தினர் பருத்தித்துறை புனித தோமஸ் மகளீர் வித்தியாலய அதிபர் அருட்சகோதரி அ. ஜசிந்தாராணி அவர்கள் கல்வி பணி ஆன்மீகபணி அற்பணிப்போடு ஆற்றி வருபவர். மேலும் இங்கு வருகைதந்துள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், எமது அன்பிற்குரிய மாணவர்கள் இவர்கள் அனைவருக்கும் வணக்கம் கூறி அன்புடன் வருக வருக என வரவேற்பதில் மகிழ்ச்சிஅடைகின்றேன்.

எமது பாடசாலை இற்றைக்கு சுமார் 150 வருடங்களுக்கு முன்பு அல்வாய் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களின் கல்வி கண்களை திறப்பதற்காக கத்தோலிக்க மிஷனரியினால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஓர் ஆரம்ப பாடசாலையாக அல்வாய் பழைய வேதக்கோயில் வளாகத்தில் இயங்கி வந்தது. பின்னர் 1910ம் ஆண்டு சற்கோட்டை கடற்கரையில் கருணை பொழிகின்ற புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் அருகே நகர்த்தப்பட்ட இக் கல்விக்கூடம் பல்லாயிரக்கணக்கான கல்வி மான்களையும் கலைஞர்களையும் நாட்டு பற்றாளர்களையும் உருவாக்கிய பெருமை கொண்டது.

நல் மனம் படைத்த பல பெரியோர்களின் அர்பணிப்பும் ஈகமும் கடின உழைப்பும் பங்கு தந்தையர்களின் வழிகாட்டலும் உதவியும் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது. அவர்கள் எல்லோரையும் இப் பாடசாலை சமூகம் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூர்ந்து இக் கல்விக்கூடத்தை பாதுகாக்கவும் வளர்த்து எடுக்கவும் கடமைப்பட்டுள்ளது.

## தற்போது கல்வி கற்கும் மாணவர் விபரம் - 2016 நவம்பர்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 | 10 | 09 | 19 |
| 02 | 08 | 09 | 17 |
| 03 | 11 | 07 | 18 |
| 04 | 15 | 07 | 22 |
| 05 | 10 | 19 | 29 |
| 06 | 11 | 06 | 17 |
| 07 | 15 | 14 | 29 |
| 08 | 10 | 08 | 18 |
| 09 | 16 | 07 | 23 |
| 10 | 19 | 16 | 35 |
| 11 | 09 | 10 | 19 |
| மொத்தம் | 134 | 112 | 246 |

### தற்போதைய ஆளணி விபரம்.

| | |
|---|---|
| அதிபர் | 01 |
| நிரந்தர ஆசிரியர் தொகை | 19 |
| தொண்டர் ஆசிரியர் (Non.R.C) | 01 |
| கல்வி சாராத பணியாளர் | 01 |
| அலுவலக உதவியாளர் (பா.அ.குழு அனுசரனை) | 01 |

இவ்வருடம் 2016 இல் 29 மாணவர்கள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி செல்வி ஸ்ரான்லிஅலன் சதுர்சனா 161 புள்ளி, செல்வி கிசோதயாபரன் சுதாமதி 161 புள்ளி என இருவர் சமனான புள்ளிகள் பெற்று புலமைப்பரிசிலுக்கு தகுதி பெற்றுள்ளனர். 100 புள்ளிக்கு மேல் 18 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

| ஆண்டு | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | சித்தி அடைந்தோர் | சித்தி வீதம் | 70 புள்ளிக்கு மேல் | சித்தி வீதம் | 100 புள்ளிக்கு மேல் | சித்தி வீதம் | வெட்டுப்புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2016 | 30 | 29 | 02 | 6.89 | 24 | 83 | 18 | 62 | 152 |

எமது பிள்ளைகளின் அடைவு மட்டம் திருப்தி அடையக்கூடியதாகும். 2014ம் ஆண்டில் எமது பாடசாலை மாணவன் செல்வன் மரியசேவியர் வினுஸ்ரன் 190 புள்ளிகள் பெற்று வடமராட்சி கல்வி வலயத்தில் அதி கூடிய புள்ளி பெற்ற மாணவனாக சாதனை படைத்தமையையும் அவ் ஆண்டில் எமது மாணவர்கள் 07 பேர் புலமைப் பரிசிலுக்கு தகுதி பெற்றதையும் இச் சந்தர்பத்தில் மகிழ்ச்சியுடன் நினைவு கூருகின்றேன். அவர்கள் யாவரையும் பாராட்டுவதுடன் தரம் 05 வகுப்பிற்கு கல்வி புகட்டிய ஆசிரியர் திருமதி வசந்தி சிவராஜன் அவர்களின் அர்பணிப்பான சேவையினையும் உதவியாக இருந்த ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

கடந்த வருடம் 2015ல் க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றிய 24 மாணவர்களில் 17 மாணவர்கள் க.பொ.த (உ/த) கற்க தகுதி பெற்றுள்ளனர். சித்தி வீதம் 71% அதிகரித்ததுடன் வடமராட்சி வலயத்தில் 6ம் இடத்திற்கு வரமுடிந்துள்ளது. இது வகை II பாடசாலைகளில் 1ம் இடமாகும். அவர்களின் சிறந்த பெறுபேற்றுக்கு வழிப்படுத்திய சகல பாட ஆசிரியர்களினதும் அர்பணிப்பான சேவையினை பாராட்டுகின்றேன். தம் பிள்ளைகளை ஊக்குவித்து ஒத்துழைப்பு வழங்கும் பெற்றோர்களையும் உறுதுணையாக உள்ள வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகாகள் மற்றும் அலுவலர்கள் சகலரையுமு நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

எமது பாடசாலையில் கல்வி அபிவிருத்திக்காக பயிற்சி வினாத்தாள்கள் செய்விக்கப்படுகின்றது. மாணவர்களின் ஆளுமை விருத்திக்காக பல இணைபாடவிதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சமய மன்றம், தமிழ்மன்றம், சுகாதார கழகம், கணித, விஞ்ஞானமன்றம் என்பன செயற்படுகின்றது. தினமும் காலைக் கூட்டத்தில நற்சிந்தனை வழங்கல், உரைகள் இடம்பெறுகின்றது. காலை உடற்தகைமைப் பயிற்சி இசையுடன் நடைபெறுகின்றது. வருடந்தோறும் மெய்வல்லுநர் போட்டி நடாத்தப்படகின்றது.

இவ்வருட இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி கடற்கரை பக்கமுள்ள சற்கோட்டை புனித சவேரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு த. ஜெயசீலன் அவர்களும் உடற்கல்வி ஆசிரியர் ஆலோசகர் திரு இ. இராஜசீலன் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தனர். கௌரவ சிறுவர் விவகார இராஜங்க அமைச்சர் அவர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாடசாலை மட்ட, கோட்டமட்ட, வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி, சித்திர போட்டி, தமிழ்தினப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி, வாய்பாடு மனனபோட்டி, திருக்குறள் மனனபோட்டி, விரைவுகணித திறன்போட்டி, பொதுஅறிவுப்போட்டி, கணித புதிர் போட்டி, அனர்த்த முகாமைத்தவ அறிவுப்போட்டி, மற்றும் சகல போட்டிகளில் எமது பிள்ளைகள் ஆர்வமுடன் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். உடற்கல்வி ஆசிரியர் இல்லாத போதும் இவ்வருட ஆரம்பத்தில் எமது பாடசாலையின் 15 வயது, 17வயது, 19வயது ஆண்கள் பிரிவு உதைபந்தாட்ட அணிகளும் பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்ட அணிகளும் வலயமட்ட போட்டிகளில் ஆர்வமுடன் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் இதில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த நிகழ்ச்சிகள், போட்டிகளுக்கு வழிப்படுத்திய, அழைத்துச் சென்று உதவிய சகல ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், நலன்விரும்பிகள் சகலருக்கும் எனது பாராட்டுகளுக்கும் நன்றிகள் என்றும் உரித்தாகும்.

உலக உணவு திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்கப்படுகின்றது. உணவை சமைப்பதற்கு அர்ப்பணிப்புடன் பேருதவி அளிக்கும் திருமதி அ. மேரிமரியசுலோசனா திருமதி அ.நீற்றம்மா, செல்வி அ. மேரிலக்ஸ்மலா ஆகியோருக்கும் பாடசாலையின் சார்பில் நன்றிகள் உரித்தாகுக.

எமது பாடசாலையின் ஆரம்ப பிரிவு மாணவர்களின் ஆங்கிலக்கல்வியை விருத்தி செய்வதற்காக ELRTC ஆங்கில வகுப்பை நடத்துவதற்கு உதவி புரியும் மாணவர்களது பெற்றோர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர் செல்வி L. அனுசியா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். இவ் வருடம் நடைபெற்ற தரம் 01 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா, தரம் 03 மாணவர்களுக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பம், செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, சிறுவர்தின நிகழ்வு, ஆசிரியர்தின நிகழ்வு, நவராத்திரி நிகழ்வுகள், இன்றைய ஒளிவிழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்வு என்பவற்றிற்கும் உதவி வரும் எமது பங்குத்தந்தை, பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுகிறேன். எமது பாடசாலையில் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக அர்ப்பணிப்புடன் சேவை அடிப்படையில் பணியாற்றும் செல்வி தாரகா லிங்கராசா அவர்களிற்கும் நன்றிகள் உரித்தாகுக.

பாடசாலையின் பௌதிக வளத்தை பொறுத்தவரையில் நிலப்பற்றாக்குறை காணப்படுகின்றது. விளையாட்டு முற்றம், விளையாட்டு மைதானம், பொது மண்டபம் அவசிய தேவையாகவுள்ளது. மேலும் விஞ்ஞான ஆய்வுகூடம், ஆசிரியர் ஓய்வு அறை, நூலகம், அழகியல் பாடங்களுக்கான, செயற்பாட்டு அறைகள் என்பனவும் அமைக்கப்பட வேண்டும். சிற்றுண்டிச்சாலை நடத்த இடவசதி அற்றுள்ளது. ஏற்கனவே உள்ள பாடசாலையின் ஆரம்பகால பழைய கட்டிடம் அவசியம் புனரமைக்கப்பட வேண்டும். அதன் சுவர், நிலம், கூரை என்பன பழுதடைந்துள்ளது.

மேலும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப (ICT) பாடத்தை கற்பிக்க கூடிய ஆசிரியரும் மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனை வழங்குவதற்கான ஆசிரியரும் அலுவலக கனிஷ்ர பணியாளர் ஒருவரும் அவசிய தேவையாகவுள்ளது.

எமது பாடசாலையின் பழைய மாணவரும் நலன் விரும்பியும் ஒய்வு பெற்ற கல்வி அதிகாரியுமான திரு இ. அருளானந்தம் அவர்கள் பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள சுமார் தமக்கு சொந்தமான 5 பரப்பு காணியை பாடசாலைக்கு நன்கொடையாக வழங்க உறுதியளித்துள்ளார். அவரது இவ் உதவி அவசிய சந்தர்ப்பத்தில் எமது பாடசாலை வளர்ச்சிக்கு கிடைக்கும் மாபெரும் உதவியாகும். இது எமது பாடசாலை சமூகத்திற்கு கிடைத்த பெரும் அதிஷ்டம் என கருதுகின்றேன். பாடசாலை சமூகம் அவருக்கு என்றென்றும் நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளது.

மாணவர்களின் வரவொழுங்கு, ஒழுக்கம், உடல், உளஆரோக்கியம், கல்வி முன்னேற்றம் என்பவற்றிற்கு பெற்றோர் முதலிடம் அளித்து அக்கறை செலுத்துவதுடன் பாடசாலைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென அன்புடன் கேட்டு இந் நிகழ்வை இன்று சிறப்பாக நடாத்த அருள்பாலித்த ஆண்டவரை வணங்கி பங்களித்த அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் நிகழ்வில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றிகள் உரித்தாகுக. இறுதியாக பல்வேறு வழிகளில் வளங்களையும் தந்து வழிகாட்டி அயராது உழைக்கின்ற எமது வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

நன்றி.

வணக்கம்.

# ஒளி விழா

| தரம் | நிகழ்ச்சி | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வாழ்த்து மடல் தயாரித்தல் | 1 | அ. அகஷன் |
| | | 2 | ஹ. மீரா |
| | | 3 | நி. நிஷாந்தினி |
| | 7 திருவசனம் | 1 | ம. மரியசதுர்ஸன் |
| | | 2 | ஸ்.. சம்ஸிகா |
| | | 3 | ம. அகஷன் |
| | பாட்டு | 1 | ம. அகஷன் |
| | | 2 | ஹ. மீரா |
| | | 3 | அ. செரோமி |
| | | | |
| 2 | வாழ்த்து மடல் தயாரித்தல் | 1 | அ. அபிவர்ஷன் |
| | | 2 | தே. தனுஷ்ராஜ் |
| | | 3 | இ. மம்மதி |
| | 7 திருவசனம் | 1 | அ. அனுஷ்கா |
| | | 2 | அ. அபிவர்ஷன் |
| | | 3 | ம. நிமால்ஷன் |
| | பாட்டு | 1 | அ. அபிவர்ஷன் |
| | | 2 | தே. தனுஷ்ராஜ் |
| | | 3 | ம. நிமால்ஷன் |
| | | | |
| 3 | கழிவுப்பொருள் ஆக்கம் | 1 | யோ. தனுஷா |
| | | 2 | கி. இறைமகன் |
| | | 3 | ம. சந்தோஷ் |
| | இறை வார்த்தை பூர்த்தி | 1 | ல. றணிஸ்குமார் |
| | | 2 | சு. போரக்கதிர் |
| | | 3 | கி. இறைமகன் |
| | பேச்சு | 1 | ம. சந்தோஷ் |
| | | 2 | கி. இறைமகன் |
| | | 3 | — |

| தரம் | நிகழ்ச்சி | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 4 | கழிவுப்பொருள் ஆக்கம் | 1 | யோ. யதுஷா |
| | | 2 | ஜெ. குயின்ஷா |
| | | 3 | கி. இறைகுமரன் |
| | | | |
| | இறை வார்த்தை பூர்த்தி | 1 | வி. அமலநிலுயன் |
| | | 2 | ஹ. கிசோர் |
| | | 3 | உ. மேனுஷன் |
| | | | |
| | பேச்சு | 1 | உ. மேனுஷன் |
| | | 2 | கி. இறைகுமரன் |
| | | 3 | யோ. யதுஷா |
| | | | |
| 5 | அபிநயப்பாடல் | 1 | செ. ஜான்சனா |
| | | 2 | அ. வானுஜா |
| | | 3 | ஜே. விதுசா, டி. அனுசாயினி |
| | | | |
| | பேச்சு | 1 | ஜே. விதுசா |
| | | 2 | அ. வானுஜா |
| | | 3 | கி. சுதாமதி |
| | | | |
| | பூச்சாடி தயாரித்தல் | 1 | ஜெ. டிலக்ஷி |
| | | 2 | கி. சுதாமதி |
| | | 3 | றொ. றெஸ்மினா |
| | | | |
| 6 | சித்திரம் கூறுதல் | 1 | க. ரிஷிபா |
| | | 2 | அ. றஜீவன் |
| | | 3 | டீ. பிரியங்கா |
| | | | |
| | அபிநயப்பாடல் | 1 | டீ. பிரியங்கா |
| | | 2 | அ. அலோஜனா |
| | | 3 | உ. பிரியா |
| | | | |
| | பேச்சு | 1 | க. ரிஷிபா |
| | | 2 | இ. நிவேந்தினி |
| | | 3 | ட. டேவிட்சாம் |
| | | | |

| தரம் | நிகழ்ச்சி | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 7 | பேச்சு | 1 | றீ. லொசிங்டன் |
| | | 2 | யோ. மேரிசாந்தினி |
| | | 3 | பு. பூமிகா |
| | பக்திப்பாடல் | 1 | யூ. யூஜினா |
| | | 2 | அ. டிலக்சிகா |
| | | 3 | தே. மேரிநிறோஜினி |
| | பூச்சாடி தயாரித்தல் | 1 | றீ. லொசிங்டன் |
| | | 2 | வி. விஜயஜெதுர்சன் |
| | | 3 | அ. அபிநயா, இ. சுரேஷ்கரன் |
| 8 | பக்திப்பாடல் | 1 | சா. பொன்ஒளி |
| | | 2 | செ. டிலக்சன் |
| | | 3 | ஜெ. டினுசன், அ. வான்மதி |
| | கவிதை கூறல் | 1 | சா. பொன்ஒளி |
| | | 2 | அ. வான்மதி |
| | | 3 | ஜெ. டினுசன் |
| | நத்தார் மரம் தயாரித்தல் | 1 | அ. வான்மதி |
| | | 2 | ஜெ. டினுசன் |
| | | 3 | கி. சுதாகரன், செ. டிலக்சன் |
| 9 | கட்டுரை எழுதுதல் | 1 | அ. மேரியதுர்சனா |
| | | 2 | ர. ரவித்தனா |
| | | 3 | பி. றொனியூட் |
| | கவிதை கூறல் | 1 | றொ. யூட்கமிலஸ் |
| | | 2 | அ. மேரியதுர்சனா |
| | | 3 | யூ. யஸ்ரின்சேகர் |
| | பாலன் குடில் தயாரித்தல் | 1 | றீ. றொபின்சன் |
| | | 2 | அ. அன்ரனிஅருள்ராஜ், ஜெ. ஜென்சிகா |
| | | 3 | றொ. அபர்ணா |

| தரம் | நிகழ்ச்சி | நிலை | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 10 | கட்டுரை எழுதுதல் | 1 | அ. மரியலேனாட் |
| | | 2 | ர. விதுஷன் |
| | | 3 | சு. அனஸ்ராஜ் |
| | பக்திப்பாடல் | 1 | அ. நிலக்ஷனா |
| | | 2 | அ. மரியலேனாட் |
| | | 3 | யோ. டானிக்கொன்ஸ்ரைன் |
| | வெளிச்சக் கூடு தயாரித்தல் | 1 | உ. உதயசீலன் |
| | | 2 | க. பிரதீபா, யோ. டானிக்கொன்ஸ்ரைன் |
| | | 3 | சி. தர்மசீலன், ம. பிரதீபன் |
| 11 | கட்டுரை எழுதுதல் | 1 | இ. வினோஜினி |
| | | 2 | அ. டில்குஷா |
| | | 3 | பி. மேரிறெஜிஸ்ரலா, றொ. றொசாந்தினி |
| | பக்திப்பாடல் | 1 | யோ. ரதிக்கா |
| | | 2 | அ. நிதர்சனா |
| | | 3 | இ. வினோஜினி, ஜெ. வைஸ்ணவி |
| | வெளிச்சக் கூடு தயாரித்தல் | 1 | அ. நியூறன் |
| | | 2 | டே. அன்ரன்ஜெயக்குமார் |
| | | 3 | வி. நிதுசன் |

க.பொ.த ( சா/ த) 2015 பரீட்சைப் பெறுபேறு.

**யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை.**

| தொ. இல | மாணவர் முழுப் பெயர் | A | B | C | S | W |
|---|---|---|---|---|---|---|
| 01 | அ. மரியநிலோசா | 7 | 1 | 1 | 0 | 0 |
| 02 | லோ. சஜீபா | 4 | 2 | 1 | 2 | 0 |
| 03 | ப. கிருசாயினி | 3 | 2 | 3 | 0 | 1 |
| 04 | ப. மேரிஅனிஸ்ரா | 3 | 2 | 2 | 1 | 1 |
| 05 | பி. அன்ரன்கபில் | 3 | 0 | 3 | 2 | 1 |
| 06 | அ. ஜக்குலின்மேரி | 2 | 3 | 0 | 2 | 2 |
| 07 | கு. ஸ்ரிபன்ராஜ் | 2 | 2 | 1 | 3 | 1 |
| 08 | அ. மரியயதுர்சா | 1 | 4 | 1 | 2 | 1 |
| 09 | யோ. நிவேதினி | 1 | 2 | 3 | 2 | 1 |
| 10 | அ. ஜான்சன் | 1 | 1 | 4 | 2 | 1 |
| 11 | ஜெ. ஜெனிஸ்ரன் | 1 | 1 | 3 | 3 | 1 |
| 12 | சி. துர்சன் | 1 | 0 | 3 | 4 | 1 |
| 13 | ம. றஜிந்தன் | 0 | 2 | 5 | 2 | 0 |
| 14 | செ. யதுசன் | 0 | 1 | 4 | 2 | 2 |
| 15 | அ. அருண் | 0 | 1 | 2 | 3 | 3 |
| 16 | அ. ஜெறாச் | 0 | 0 | 4 | 3 | 2 |
| 17 | சூ. எழில்அமுதன் | 0 | 0 | 3 | 5 | 1 |

## தரம் - 05 புலமை பரிசில் பரீட்சை – 2016

| தொ. இல | மாணவர் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1 | ஸ்ரான்லிஅலன் சதுர்சனா | 161 |
| 2 | கிசோதாயாபரன் சுதாமதி | 161 |
| 3 | செல்வநாயகம் ஜான்சனா | 148 |
| 4 | பிறின்ஜென்கின்ஸ் அனுசாயினி | 144 |
| 5 | ஜெயச்சந்திரன் டிலக்ஷி | 143 |
| 6 | ஜேம்சன்யேசுராசா விதுசா | 135 |
| 7 | யூட்றொகிறாகவன் டிரூசன் | 132 |
| 8 | சுமன் ஒளிவாணி | 132 |
| 9 | றணசிங்க ஆராச்சிகே றொகான் நிசாந்த நித்தியா | 130 |
| 10 | அன்றூ கனிஸ்ரலா | 126 |
| 11 | அன்ரனி ஜெயராசா வானுஜா | 125 |
| 12 | றமேஸ் பௌர்மியா | 121 |
| 13 | றொபேட்கெனடி றெஸ்மினா | 120 |
| 14 | தேவராசா தர்சிகன் | 116 |
| 15 | அன்ரன்தர்மராசா அபிஷ்சா | 113 |
| 16 | செல்வக்குமார் கலைக்சன் | 107 |
| 17 | கிறிஸ்துராசா திர்சாள் | 105 |
| 18 | றொபேட்கெனடி றொபிஸ் | 103 |

## வலய மட்ட போட்டிகள் – 2016.

| பெயர் | தரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|---|
| அ. மரியலேனாட் | 10 | சமூகவிஞ்ஞானம் | 3 |
| ஜே. சுபாங்கன் | 9 | பண்ணிசை | 1 |
| பி. றொனியூட் | 9 | கோலம் | 2 |
| இ. சுரேஸ்கரன் | 7 | கோலம் | 2 |
| அ. நிதர்ஷா | 11 | 800m ஓட்டம் (under 17) | 1 |
| அ. மேரியதுர்சனா, பி. அபர்ணா, சா. பொன்ஒளி, டே. மேரிசபீனா | | 4X400m ஓட்டம் (under 15) | 3 |

# அதியுயர் பாடத்தேர்ச்சி பரிசு பெறுவோர் - 2016.

## தரம் 01

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ் | தி. ஆனஸ்ராஜ், ஹ. மீரா, நி. நிஷாந்தி, ஸ் சம்சிகா, அ. செரோமி |
| சைவசமயம், பொதுத்திறமை | நி. நிஷாந்தி |
| R.C | ஸ் சம்சிகா |
| Non.R.C | அ. செரோமி |
| கணிதம் | ஜெ. அபர்ணா, அ. செரோமி, நி. நிஷாந்தி, ஹ. மீரா |
| சுற்றாடல் | ம. மரியதர்சன், பா. அலெக்ஸ், ஞா. லோஜித், இ. மதுமதி, தி. ஆனஸ்ராஜ், ஹ. மீரா, நி. நிஷாந்தி, ஸ் சம்சிகா, அ. செரோமி |

## தரம் 02

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ் | அ. அனுஸ்கா |
| கணிதம், சுற்றாடல், சைவசமயம் | தே. தனுஸ்ராஜ் |
| R.C | அ. அபிவர்ஷன் |
| பொதுத்திறமை | இ. மம்மதி |

## தரம் 03

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ், சுற்றாடல், ஆங்கிலம் | ல. றணிஸ்குமார் |
| கணிதம், R.C | சு. போர்க்கதிர் |
| சைவசமயம் | பு. சதுர்சினி |
| Non.R.C | டே. டேவிட்சதீஸ் |
| பொதுத்திறமை | ம. சந்தோஸ் |

## தரம் 04

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ், R.C, சுற்றாடல், கணிதம் | றொ.. டெசிந்தன் |
| சைவசமயம் | சா. பிரசாந் |
| Non.R.C | அ. ஷெரோன் |
| ஆங்கிலம் | ஜெ. குயின்ஷா |
| பொதுத்திறமை | ஹ. கிசோர் |

## தரம் 05

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ், R.C | ஜெ. டிலக்சி |
| கணிதம் | செ. ஜான்சனா |
| சைவசமயம் | தே. தர்சிகன் |
| Non.R.C | வி. அபிராமி |
| ஆங்கிலம் | ஸ் சதுர்சனா |
| சுற்றாடல் | சு. ஒளிவாணி |
| பொதுத்திறமை | அ. கனிஸ்ரலா |

## தரம் 06

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ், R.C, பொதுத்திறமை | அ. அலோயனா |
| கணிதம் | செ. அன்ரன்பிராங்கிளின் |
| சைவசமயம் | ப. அனுசாயினி |
| N.R.C | டே. டேவிட்சாம் |
| விஞ்ஞானம், வரலாறு | ப. அனுசாயினி |
| ஆங்கிலம் | டி. பிரியங்கா |

## தரம் 07

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ், R.C, கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் | வி. விஜயஜெதுர்சன் |
| சைவசமயம் | பு. பூமிகா |
| N.R.C | சு. சுலக்சன் |
| பொதுத்திறமை | றொ. றொசிங்டன் |

## தரம் 08

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ் | அ. மரியசினேக்கா |
| கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் | சு. சுஜிந்தன் |
| R.C | ஜெ. டினுசன் |
| சைவசமயம் | ச. கனிஸ்ரன் |
| N.R.C | யோ. சுஜ°பா |
| பொதுத்திறமை | செ. டிலக்சன் |

## தரம் 09

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ் | ஜ. றொபின்சன் |
| R.C | அ. மேரியதுர்சனா |
| சைவசமயம், ஆங்கிலம் | ர.ரவித்தனா |
| Non.R.C | வீ. யக்சன் |
| பொதுத்திறமை | றொ. றொகான் |

## தரம் 10

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ், R.C, வரலாறு, ஆங்கிலம் | அ. மரியலேனாட் |
| கணிதம் | யோ. றொபின்கனிஸ்ரா |
| சைவசமயம், விஞ்ஞானம் | ப. தாட்சாயினி |
| Non.R.C | யோ. டானிக்கொன்ஸ்ரைன் |
| பொதுத்திறமை | லோ. அஜீபன் |

## தரம் 11

| பாடம் | மாணவர் பெயர் |
|---|---|
| தமிழ், R.C, கணிதம், ஆங்கிலம் விஞ்ஞானம், வரலாறு | றொ. றொசாந்தினி |
| சைவசமயம் | சூ. நிதர்சா |
| பொதுத்திறமை | அ. டில்குஷா |

# பரிசளிப்புக்கு அன்பளிப்பு வழங்கியோர் விபரம்.

- திருமதி ஜெயமேரி விஜயகுமார்.
    - கலர் பென்சில் பெட்டி 1 (48 பென்சில்)
    - கலர் பென்சில் பெட்டி 1 (12 பென்சில்)
    - கணித உபகரணப் பெட்டி 2
    - 60 ஒற்றை கொப்பி 10
    - 100 ஒற்றை கொப்பி 03
- திரு அன்ரன் இருதயகுமாரன்
    - 100 ஒற்றை கொப்பி 12
    - சித்திரக் கொப்பி 06
    - அடிமட்டம் 10 (30cm)
- திரு எ. டீன்குமார்
    - கணித உபகரணப்பெட்டி 30 (Natraj)
- வலயக்கல்வி அலுவலகம்
    - கணித உபகரணப் பெட்டி 12 (Oxford)
    - 120 ஒற்றை கொப்பி 32
- தேசிய சேமிப்பு வங்கி
    - 120பக்க கொப்பி 10
    - ரெனிஸ் பந்து 02
    - உண்டியல் 02
- மக்கள் வங்கி
    - வெற்றிப் பதக்கம் 02

# பரிசளிப்புக்கு நிதி உதவி வழங்கிய பழைய மாணவர் மற்றும் நலன் விரும்பிகள் விபரம்.

| | |
|---|---|
| ▪ திரு. ஜோ. அருள்தாஸ் | 5000.00 |
| ▪ திரு. ம. றஞ்சித் (தந்தை அமரர் மரியராசா ஞாபகார்த்தம்) | 5000.00 |
| ▪ திரு. இ. திருச்செல்வம் (ஆசிரியர்) | 2000.00 |
| ▪ திரு. ஆ. அஜந்தன் | 2000.00 |
| ▪ திரு. அ. வின்சன்சகாஜராசா | 2000.00 |
| ▪ திரு. அ. றொபேட்றெஜி | 2000.00 |
| ▪ திரு. லீ. டேவிற் | 1000.00 |
| ▪ திரு. த. சந்திரதாஸ் | 1000.00 |

- முன்னாள் அதிபர் அமரர் வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி ஞாபகார்த்த நிதியத்தில் இருந்து ரூபா 1000.00 இது வருடந்தோறும் க.பொ.த (சா.த) பரீட்சை அதியுயர் பெறுபேற்றிற்கு வழங்கப்படுகின்றது.
- 2016 செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்விற்கு உடை வாங்குவதற்கு உதவி வழங்கியவாகள்
  - ➢ இ. யூட்றொகி றாகவன் ரூபா 5000.00
  - ➢ மரியசேவியர் வினுஸ்ரன், மரியசேவியர் மரிஸ்ரன் ரூபா 5000.00